# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# ஆண்டிறுதிப் பரீட்சை 2022

ஆண்டு: 8 திகதி: 26-11-2022

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர் : திருமதி. சத்தியதேவி பாலகங்காதரன்

மாணவர் பெயர்: ___________________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 20 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 25 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

**பண்பாட்டு விழா**

எங்கள் பள்ளி மாணவர் மன்றம் சென்ற மாத இறுதியில் தமிழர் பண்பாட்டு விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது. அவ்விழாவின்போது தமிழர்களின் ஆடை அணிகலன்கள், பாரம்பரிய ஒப்பனை அலங்காரப் பொருட்கள் போன்றவை மிகச் சிறப்பான வகையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. எங்கள் பள்ளியில் பயிலும் பிற இன மாணவர்களும் அவற்றையெல்லாம் கண்டு களித்தனர்.

இந்தப் பாரம்பரிய விழாவினைக் காண வந்தவர்களுக்கு எங்கள் பள்ளி மாணவியர், எமது பாரம்பரிய நடனங்கள் ஆகிய பரதம், கிராமிய நடனம் ஆகியவற்றை ஆடிக் காண்பித்தனர். அப்போது அவற்றிற்கான தெளிவான விளக்கங்களை நடன ஆசிரியர் கூறினார். பல்வகை நடனங்களையும் கண்டு களித்தவர்களுக்கு விருந்து அளித்தோம். அவ்விருந்தில் எமது பாரம்பரிய அறுசுவைப் பலகாரங்களும் உணவு வகைகளும் பரிமாறப்பட்டன. வந்த விருந்தினர்கள் அவற்றை சுவைத்து உண்டு மகிழ்ந்தனர்.

மேலும் எமது பாரம்பரிய வீர விளையாட்டுக்களான மல்யுத்தம், குத்துச்சண்டை முதலியவற்றையும் வண்ணப்படங்களாக வரைந்து காட்சிக்கு வைத்து இருந்தோம். தமிழ் மன்றத்தைச் சேர்ந்த மாணவர்கள் அறுவர் சிலம்பாட்டத்தை விளையாடிக் காட்டினர்.

விளையாட்டைக் கண்டு களித்த விருந்தினர்கள் சிலம்பக்கலையைப் பற்றி மேலும் அறிய விரும்பியதால் எங்கள் தமிழாசிரியர், “பண்டைக் காலத்தில் தமிழர்கள் விரும்பி விளையாடிய வீர விளையாட்டுகளுள் சிலம்பம்

சிறப்பிடம் பெற்றுள்ளது. நாட்டுப்புறங்களில் வாழ்ந்து வந்த தமிழர்கள் மிருகங்களிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள நீண்ட கோல்களைப் பயன்படுத்தினர். அதிலிருந்து இக்கலை வளர்ச்சியடைந்து இன்று தற்காப்புக் கலையாக மாறியுள்ளது" என்று விளக்கிக் கூறினார்.

1. விழாவின்போது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்கள் யாவை?

______________________________________________

______________________________________________

______________________________________________

2. விருந்தினர்களுக்கு பரிமாறப்பட்டவை எவை?

______________________________________________

______________________________________________

______________________________________________

3. ஏன் சில விளையாட்டுகள் வண்ணப்படங்கள் ஆக மட்டும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன?

______________________________________________

______________________________________________

______________________________________________

4. சிலம்ப கலைக்கு அடிப்படை எது?

______________________________________________

______________________________________________

______________________________________________

5. சிலம்பக்கலை பற்றிய உமது கருத்தை எழுதுக?

______________________________________________

______________________________________________

______________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

கவனமாகப் படிக்கவும்.

வானவில் பயண நிறுவனம் ஏற்பாடு செய்யும் ஐந்து நாள் சுற்றுப்பயணத்தில் ஒருவர் எங்கெங்கே செல்லலாம் என்ற குறிப்புகள் கீழே கொடுக்கப் பட்டிருக்கின்றன.

**குறைந்த விலை நிறைந்த சேவை**

**முதல் நாள்**

- காலை உணவுக்குப்பின் உண்டுறை விடுதியிலிருந்து புறப்படுதல்
- கொடைக்கானலில் உள்ள தேயிலைத் தோட்டத்தை சுற்றிப் பார்த்தல்
- தேயிலை பறிக்கும் அனுபவம் பெறுதல்
- குளிர்ச்சியான இயற்கைச் சூழ்நிலையில் வளரும் 'யூகலிப்டஸ்' மரங்களைக் காணுதல்
- இயற்கை காட்சிகளைக் கண்டு ரசித்தல்

**இரண்டாம் நாள்**

- ஊட்டிக்குச் செல்லுதல்
- படகில் பயணம் செய்தல்
- வண்ண மலர்த் தோட்டங்களைக் காணுதல்

**மூன்றாம் நாள்**

- மகாபலிபுரம் செல்லுதல்
- சிற்பக் கூடங்களைக் கண்டு மகிழ்தல்
- கலை கோயில்களைப் பார்வை இடுதல்
- கடலில் குளித்தல்

**நான்காம் நாள்**

- சென்னையில் உள்ள கைவினைப் பொருள்கள் விற்கும் பூம்புகார் நிலையத்திற்குச் செல்லுதல்
- நினைவுப் பொருட்கள் வாங்குதல்

**ஐந்தாம் நாள்**

- காலையில் சென்னை நகரைச் சுற்றிப் பார்த்தல்
- மதிய உணவுக்குப் பின் உண்டுறை விடுதியிலிருந்து புறப்படுதல்
- பிற்பகல் 4 மணிக்கு விமான நிலையம் செல்லுதல்
- நள்ளிரவு 12 மணிக்கு வீடு வந்தடைதல்

**இச்சுற்றுப் பயணத்தில் நீர் பங்கு கொண்டால் பெற்றுக்கொள்ளக்கூடிய புதிய அனுபவங்கள் எவை?**
**உமக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடியவை எவை? என விபரித்து 45 சொற்களுக்குக் குறையாமல் பந்தி ஒன்று எழுதுக**

| வினா இல | 3 | புள்ளிகள் | 20 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**கீழ் காணும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தை நிரப்புவதற்காக மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

| | |
|---|---|
| உடல் | உடனே |
| உண்டு | உண்ணும் |
| நிறைந்ததாக | எளிதில் |
| மட்டும் | சென்று |
| சேர்ந்ததாக | இருக்க |

மனிதன் பசிக்காக உண்ணும் நிலை மறைந்து விட்டது. அவன் இப்போது ருசிக்காக ________________ வழக்கம் வளரத் தொடங்கியுள்ளது. ஆனால், நாம் உண்ணும் உணவு ருசியானதாக ________________ இருந்தால் போதுமா? அது ஊட்டச்சத்து ________________ இருக்க வேண்டும். அதில் நார்ப் பொருட்களும் மிகுதியாக ________________ வேண்டும்.

நாம் உண்ணும் உணவில் நார்ப்பொருட்கள் எந்த அளவுக்கு மிகுதியாக இருக்கின்றனவோ அந்த அளவுக்கு நம் ________________ ஆரோக்கியத்துடன் திகழும். நார்ப்பொருட்கள் தாவரங்களில் நிறைவாக இருக்கின்றன. அவை நம் உடலுக்குள்________________ செரிமானமாக நீண்ட நேரம் ஆகும். ஆனால், விலங்குகளுக்கு எளிதில் செரிமானம் ஆகி விடுகின்றன.

இவற்றைத் தவிர உடல் ________________ செரிக்கக்கூடிய நார்ப் பொருட்கள் பழங்கள், காய்கறிகள், கோதுமை, கொண்டைக்கடலை முதலியவற்றில் மிகுதியாக உள்ளன. இவற்றை அடிக்கடி ________________ வந்தால் நம்மை நோய் நெருங்காது. நமது சருமம் பளபளப்பாகத் தோன்றும்.

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக.

1. அன்று எனது உறவினரின் திருமண வைபவம்.
2. இதனால் மண்டபம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.
3. திருமணக் கிரியைகள் நடைபெற்றன.
4. வந்திருந்தவர்கள் மணமக்களை வாழ்த்தினர்.
5. எல்லோரும் விருந்துண்டு மகிழ்ந்தனர்.

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 70 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக

- இலங்கை அல்லது தமிழ்நாட்டிற்கு சென்றுள்ள உமது நண்பரொருவர் அங்கிருந்து உம்முடன் தொலைபேசியில் உரையாடுகிறார் அந்த உரையாடலை எழுதுக.
- இலங்கை அல்லது இந்தியாவில் வாழும் உமது தோழன் / தோழிக்கு அவுஸ்ரேலிய பல்கலாச்சார நாட்டில் எவ்வாறு தமிழைக் கற்கிறீர் என்பது பற்றி ஒரு கடிதம் எழுதுக .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 6 | புள்ளிகள் | 25 | பக்கம் | 10 |

**கீழேயுள்ள தலைப்புக்களில் ஒன்றைத் தெரிந்து அடுத்து 120 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- முதியோரிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய விடயங்கள்
- உடற்பயிற்சியும் நல்வாழ்வும்